செய்தி வெளியீடு எண்:96 நாள்:10.07.2012

# காகித பொருட்கள் உற்பத்திக்கான பயிற்சி

சென்னையிலுள்ள தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனமானது காகித பொருட்கள் உருவாக்குவதற்கான திறன் மேம்பாட்டு பயிற்சியினை வருகின்ற ஜூலை மாதம் 19ந்தேதி முதல் 21ஆம் தேதி வரை நடத்த திட்டமிட்டுள்ளது. இப்பயிற்சியின் போது இயந்திரத்தின் வாயிலாகவும் மற்றும் இயந்திரத்தின் துணையின்றி கைகளாலும் செய்யக்கூடிய காகித பொருட்களை பற்றிய திறன் மேம்பாட்டு பயிற்சி வல்லுனர்களாலும் தொழில் முனைந்து வெற்றி கண்டவர்களாலும் வழங்கப்பட உள்ளது. இப்பயிற்சியின் போது தேவையான மூலப்பொருட்கள் செய்முறை மற்றும் நிதி பற்றிய விளக்கங்கள் வழங்கப்படும்.

மேற்கூறிய பயிற்சியில் கலந்து கொண்டு பயன் பெற தமிழில் எழுத, படிக்க தெரிந்திருந்தால் போதுமானது. வயது வரம்பு இல்லை. ஆகவே இப்பயிற்சியில் சேர விரும்புவோர் திரு.கே.ஸ்ரீதரன், பயிற்சி ஒருங்கிணைப்பாளர், தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், டி.ஐ. கட்டிடம், கிண்டி, சென்னை-32 என்ற முகவரியிலோ அல்லது கைபேசி எண்: 8754590964 மற்றும் 044-22502411/12 மற்றும் மின் அஞ்சல் : edichennai@gmail.com தொடர்பு கொள்ளலாம் என தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் இயக்குநர் திரு.ஹர்மந்தா சிங், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை-1.